# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2052/32 - 2018 ජනවාරි මස 05 වැනි සිකුරාදා - 2018.01.05

*2052/32 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)

76அ ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படுகின்ற அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 104ஆ (1) ஆம் உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு எடுக்கவேண்டியுள்ளமையாலும், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76அ ஆம் பிரிவுக்கமைய தேர்தலை நடாத்துவதற்குள்ள தடங்கல்களை அகற்றுவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் பணிப்பை வழங்க முடியுமாதலாலும் தேர்தல் ஆணைக்குழுவினால் கீழே காட்டப்பட்டுள்ள பணிப்புக்கள் விதிக்கப்படுகின்றனவென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1. **தேர்தல் தினத்திற்கு 48 மணித்தியாலத்திற்கு முன்னர் பிரச்சார நடவடிக்கைகளை இடைநிறுத்தல்.**- தேர்தல் தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்பிருந்து தேர்தல் முடிவுகளில் பாதிப்பை ஏற்படுத்தத்தக்க விதத்திலான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்சி, குழு, வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கை அல்லது கட்சிகள் அல்லது குழுக்கள் அல்லது வேட்பாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளல் தடைசெய்யப்பட்டுள்ளதென இத்தால் விதிக்கப்படுகின்றது.

(அ) எவ்வடிவத்திலேனும் பிரச்சார கூட்டங்களை நடாத்துதல் ;

(ஆ) வாக்குகளை இரந்து கேட்பதற்காக வீடு வீடாகச் செல்லுதல் ;

(இ) துண்டுப் பிரசுரங்கள் அல்லது அறிவித்தல்களை பகிர்ந்தளித்தல் ;

(ஈ) வேட்பாளர்கள் பயணம் செய்கின்ற வாகனங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு வாகனத்திலோ, வதிவிடத்திலோ, வதிவிடம் தவிர்ந்த கட்டிடத்திலோ, தற்காலிகக் கட்டிடமொன்றிலோ, வெற்றுக் காணியொன்றிலோ, பொது இடமொன்றிலோ அல்லது பொது மக்களுக்குத் தெரியத்தக்க எந்தவோர் இடத்திலோ கட்சிகள், குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தத்தக்க கொடிகள், பதாகைகள், சோடணைகள், அறிவித்தல்கள், சித்திரங்கள், உருவப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தல் அல்லது பொருத்துதல் ;


1A - PG 3869 — 207 (2018/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(உ) அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக வலைப்பின்னல் ஊடகங்கள் அல்லது தொலைபேசி ஊடாக வாக்குகளை இரந்து கேட்டலும் மேற்குறித்த ஊடகங்களூடாக பிரச்சார அறிவித்தல்களை காட்சிப்படுத்தலும் ;

(ஊ) ஒலிபெருக்கிகளூடாக பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(எ) சமய ரீதியான சடங்குகளின் பேரில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(ஏ) இக்காலப்பகுதிக்குள் அலுவலகமொன்றை நடாத்திச் செல்லுகின்ற வேட்பாளரின் வதிவிடத்திலும்கூட கட்சிகள்/குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தத்தக்க அறிவித்தல்கள், பாரியளவிலான உருவப்படங்கள், புகைப்படங்கள், சித்திரங்கள், கொடிகள், பதாகைகள், சோடணைகள் எவற்றையும் காட்சிப்படுத்தல் கூடாது.

**2. வாக்குகளை இரந்து கேட்பதற்காக வீடு வீடாகச் செல்லலும் துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தலும்.**- வேட்புமனு கால எல்லை முடிவடைகின்ற தினத்திலிருந்து ஆரம்பித்து தேர்தல் நடாத்தப்படுகின்ற தினத்திற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் முடிவடைகின்ற காலப்பகுதி வரையிலான காலத்திற்குள் எவரேனுமொரு வேட்பாளருக்கு வாக்குகளை இரந்து கேட்பதற்காக வீடு வீடாகச் செல்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

(அ) தேர்தல் காலப்பகுதிக்குள் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குக் காரணமாகக்கூடிய ஊர்வலங்கள், நடைபவனிகளை நடாத்துவது தடையாதலால் இவ்வலுவல்களில் கலந்துகொள்ள முடிவது வேட்பாளருக்கு ஆகக்குறைந்தது மேலும் 10 பேருக்கு மாத்திரமேயாகும். அதாவது குறித்த அலுவல் ஒரு ஊர்வலமாகவோ நடைபவனியாகவோ இருக்கக் கூடாது ;

(ஆ) ஒலியைப் பெருப்பிக்கின்ற அல்லது உருவாக்குகின்ற எந்தவோர் உபகரணத்தையோ, சங்கீத குழுவினர்களையோ பயன்படுத்தலோ, உரக்கச் சத்தமிட்டவாறு வீடு வீடாகப் பிரயாணம் செய்வதோ தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் இச்சந்தர்ப்பங்களில் அறிவித்தல்கள், பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகளைக் காட்சிப்படுத்தலோ எடுத்துச்செல்லலோ கூடாது ;

(இ) கட்சியின் அல்லது வேட்பாளரின் கொள்கைப் பிரகடனத்தைத் துண்டுப் பிரசுரமாக வாக்காளர்களுக்கு வழங்க முடியுமென்பதோடு, அக்கொள்கைப் பிரகடனத்தில் வேட்பாளரின் உருவப்படத்தையும் (தேவைப்படின் ஏனைய வேட்பாளர்களின் உருவப்படங்களையும்) கட்சியின்/குழுவின் பெயரையும், சின்னத்தையும் மாத்திரம் உள்ளடக்க முடியும். இத்துண்டுப் பிரசுரங்களைக் காட்சிப்படுத்த முடியுமான பிரச்சார அறிவித்தல்களாகத் தயாரிக்கக் கூடாது. பிரச்சார அறிவித்தல்களாக பயன்படுத்தக் கூடாது ;

(ஈ) பகிரங்க இடங்களில் எந்தவொரு ஒலியைப் பெருப்பிக்கக்கூடிய அல்லது ஒலியை உருவாக்கக்கூடிய கருவிகளைப் பயன்படுத்தாமல் அமைதியாக பொது மக்களுக்குத் தடங்கலின்றி துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளிக்க முடியும் ;

(உ) பகிர்ந்தளிக்கப்படுகின்ற துண்டுப் பிரசுரங்களில் அச்சகரினதும், வெளியீட்டாளரினதும் பெயர்களும் உரிய தகவல்களும் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதோடு, அத்துண்டுப் பிரசுரங்கள் எவ்விதத்திலேனும் குரோத மனப்பான்மையை வெளிப்படுத்துபவையாகவும் சமய, மொழி, இன, சாதி பேதங்களை ஏற்படுத்தத்தக்கதாகவோ அமையக் கூடாது ;

(ஊ) இந்நிபந்தனைகளை மீறுதல் பணிப்பு மீறல்களாகக் கொள்ளப்படுமென்பதோடு, இந்நிபந்தனைகள் மீறப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சிக்கு, குழுவிற்கு அல்லது வேட்பாளருக்கு விடுக்கப்படுகின்ற அறிவித்தலொன்றின் பின்னர் அவ்வனுமதியை இடைநிறுத்த முடியும்.

**3. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களுக்கான அறிவிக்கப்பட்ட அலுவலகங்களை நிறுவுதல் :**

(அ) தேர்தலின்போது தமது கட்சியின்/சுயேச்சைக் குழுவின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போட்டியிடுகின்ற கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் அந்தந்த உள்ளூர் அதிகார சபைகள் சார்பாகவும் ஏதேனுமொரு உள்ளூராட்சி நிறுவனம், முழுமையான வாக்கெடுப்புப் பிரிவு பலவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றவிடத்து அந்தந்த வாக்கெடுப்புப் பிரிவு சார்பாக ஒரு அறிவிக்கப்பட்ட மத்திய அலுவலகத்தையும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஓர் அறிவிக்கப்பட்ட கிளை அலுவலகத்தையும் வேட்புமனு கையளிக்கும் காலப்பகுதியின் இறுதி நாளிலிருந்து தேர்தல் தினத்திற்கு 48 மணித்தியாலத்திற்கு முன்னர் முடிவடைகின்ற காலப்பகுதி வரை தேர்தல் ஆணைக்குழுவினால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு விதிக்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு

நடாத்திச் செல்வதற்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதியொன்று வழங்கப்படும். அவ்வறிவுறுத்தல்கள், மட்டுப்பாடுகள், நிபந்தனைகளை மீறுகின்ற அல்லது சட்டத்திற்கு முரணான பழக்கங்கள் அல்லது மக்களுக்கு தொல்லைகளை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அலுவலகங்கள் சட்ட முரணான அலுவலகங்களாகக் கருதப்பட்டு தேர்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது ;

(ஆ) வட்டாரத்திற்குப் போட்டியிடுகின்ற மேலதிக பட்டியலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வதிவிடங்களை அலுவலகமொன்றாக நடாத்திச் செல்வதற்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும் மட்டுப்பாடுகளுக்குட்பட்டு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதியொன்று வழங்கப்படும். வதிவிடத்திலும் கூட நடாத்திச் செல்லப்படுகின்ற அலுவலகங்கள் தேர்தல் சட்டத்திற்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கும் இணங்க பொதுமக்களுக்கு தொல்லைகளின்றி நடாத்திச் செல்லப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல்கள் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல்கள் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல்கள் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2018, சனவரி 05.

01-808

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.